# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி...!

முதல் பக்கத் தொடர்ச்சி!

மாற்றப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இருந்து கூடுதல் மின்சாரத்துறை ஊழியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் பாதிப்படையாத வண்ணம் அனைத்து நடவடிக்கைகளும் அரசு தரப்பில் அலுவலர்கள், மாநகராட்சிப் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 356 நீரேற்று நிலையங்களும் ஜெனரேட்டர்கள் மூலம் இயங்கும் வகையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜெட்ராடிங், தூர்வாரும் இயந்திரங்கள், சூப்பர் சக்கர் உள்ளிட்ட 373 இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்தப் பணிகளில் கூடுதலாக 83 கழிவுநீரகற்றும் வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த மழைநேரத்தில் தமிழ்நாடு அரசு தருகின்ற வழிகாட்டுதல்களையும் முறையாகப் பின்பற்றி, பொதுமக்களும் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும், ஊடகவியலாளர்கள் பத்திரிகையாளர்கள், மக்களுக்கு பொறுப்புடன் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் செய்திகளை வெளியிட வேண்டும். நாம் அனைவரும் கரம் கோர்த்து,

இந்த மழைக்காலத்தில் நம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வோம். நன்றி வணக்கம்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர்

ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; இந்தியாவில் ரயில் விபத்துகள் தொடர்கதையாகி வருகிறதே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், கடந்த அய்ந்து ஆண்டுகளில் 200 பெரும் ரயில் விபத்துகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிகிறது.**

**கடந்த ஆண்டில் 20 ரயில் விபத்துகள்; அவ்வளவு ஏன், இப்போது 2024-ல் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்த முதல் 100 நாட்களில் மட்டும் 38 ரயில் விபத்துகள்.**

**அதனால்தான், ஆண்டாண்டுக் காலமாக இருந்த 'ரயில்வே பட்ஜட்' என்பதையே ஒழித்துக் கட்டி விட்டார்களோ ?**

**பா.ஜ.க. ஆட்சியே, ஜனநாயகத்தில் நேர்ந்த விபத்துதானே !**

### தி.மு.க. இளைஞரணி சார்பில் திண்டிவனத்தில் மண்டல அளவில்

# 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் க.பொன்முடி தொடங்கி வைத்தார்! கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்!

திண்டிவனம் அக்.14-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு நூறு இளம் பேச்சாளர்களை தலைமைக்கு தேர்வு செய்து தருமாறு கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞரணியை அறிவுறுத்தி இருந்தார்.

அந்த வகையில் என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் பேச்சுப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்தனர்.

மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்தவர்களுக்கான பேச்சு போட்டிகள்கடந்த ஆகஸ்ட் மாதம். நடைபெற்றது.

இப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கானமண்டல போட்டிகள்விழுப்புரம்மாவட்டம் திண்டிவனம் உள்ளிட்ட 8 இடங்களில் நடைபெற்றன.

இந்நிலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் விழுப்புரம் வடக்கு ஆனந்த், தெற்கு தினகரன், கடலூர் கார்த்திகேயன், கணேஷ்குமார், கள்ளக்குறிச்சி தாகப் பிள்ளை, அருண் ராஜ், புதுச்சேரி சம்பத் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியை தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி தொடங்கி வைத்துசிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் சுப. வீரபாண்டியன், மருத்துவர் ஷாஃபி கலைமான், தமிழ் காமராசன் ஆகியோர் நடுவராக பங்கேற்ற பேச்சு போட்டியில் என்றென்றும் பெரியார் ஏன்?

அண்ணாவும் மாநில சுயாட்சியும், கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி

திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க. உள்ளிட்ட 5 தலைப்புகளில் நடைபெற்ற பேச்சு போட்டியில்

விழுப்புரம் ,கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்தும் புதுச்சேரி மாநிலத்தில் இருந்தும் 96 க்கும்மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் க.பொன்முடி சால்வை அணிவித்து பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன்,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா,நகர செயலாளர் கண்ணன்,ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், அமுதா ரவிக்குமார்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மணிமாறன், துரை, இளம்வழுதி,செயற்குழு உறுப்பினர் சீனி சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே. பி.ரமேஷ், விஜயகுமார், பாபு, அண்ணாமலை, உதயகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி – மலைக்கோட்டை

# தாயுமான சுவாமி கோவில் புதிய அறங்காவலர்கள் பொறுப்பேற்றனர்!

திருச்சி அக்.14-

திருச்சியின் பிரசித்தி பெற்ற ஆன்மீக திருத்தலங்களில் முக்கியமானது மலைக்கோட்டை தாயுமானசுவாமி திருக்கோயில், இந்தியா மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்து தாயுமான சுவாமியை தரிசித்து வருகின்றனர், திருச்சி மாநகர திருக்கோவில்களின் பெட்டகம் என்று அழைக்கப்படும் இக்கோவிலில் கடந்த பல வருடங்களாக அறங்காவலர் குழு அமைக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் என, சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சேகர்பாபு நியமன உத்தரவை தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், திருச்சி, மலைக்கோட்டை தாயுமான சுவாமி திருக்கோவிலுக்கு 5 பேர் கொண்ட அறங்காவலர்களை நியமித்து இந்து சமய அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

இக்குழுவில், திருச்சி காந்தி மார்க்கெட் மன்னார் பிள்ளை தெருவை சேர்ந்த பா.சீனிவாசன், திருச்சி, தாராநல்லூர் அலங்கநாதபுரம் இரண்டாவது தெருவை சேர்ந்த மு.கருணாநிதி, மலைக்கோட்டை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தெருவை சேர்ந்த ரா.கலைச்செல்வி, திருச்சி, எடத்தெரு, கீழ நெய்க்கார தெருவை சேர்ந்த வி.ஸ்ரீதர்,காட்டூர் காவிரி நகரை சேர்ந்த மு.கோவிந்தராஜ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ஐந்து பேருக்கும் இந்து சமய அறநிலைய துறை மாவட்ட உதவி ஆணையர் லட்சுமணன், அறங்காவலர் குழு தேர்தலை நடத்தி அறங்காவலர் குழு தலைவரை தேர்ந்தெடுத்தார், அதனைத் தொடர்ந்து இன்று கோவில் அலுவலகத்தில் முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கு கோவில் உதவி ஆணையர், செயல் அலுவலர் அனிதா திருச்சி மாநகர திமுக செயலாளரும், திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவருமான மதிவாணன், துணை மேயர் திவ்யா , மண்டல குழு தலைவர் ஜெயா நிர்மலா,திமுக பகுதி செயலாளர்கள் ஆர்ஜி.பாபு, மோகன், டி.பி.எஸ்.எஸ். ராஜ்முகமது, ஏ.எம்.ஜி.விஜயகுமார், நீலமேகம். கண்காணிப்பாளர் தேவராஜ் திருமதி. ஜெயநீலா, மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், உறவினர்கள், நண்பர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குத் தோள் கொடுத்து நின்றவர்:

# முரசொலி செல்வம் மறைவு பெரும் துயரம்!

## அரசு ஊழியர் - ஆசிரியர் நல கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் சா.அருணன் இரங்கல்!

சென்னை, அக்.14 -

முத்தமிழ் கலைஞர் அவரின் மனசாட்சியாக எப்படி முரசொலி மாறன் அவர்கள் திகைந்தாரோ அதே நிலையில், முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களின் ஏற்றத்தாழ்வில் தோள் கொடுத்து நின்றவர் முரசொலி செல்வம் அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப் பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் இரங்கல் செய்தியில் குறிப்பிட் டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலியின் முன்னாள் ஆசிரியரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சகோதரியாரின் இளைய மகனும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மன சாட்சி முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சகோதரியார் திருமதி செல்வி அவர்களின் கணவருமான முரசொலி செல்வம் அவர்கள் அக்டோபர் 10ம் தேதி மதியம் உடல் நல குறைவால் பெங்களூரில் இயற்கை எய்தினார் என்ற செய்திக்கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் எப்படி மனசாட்சியாக விளங்கினாரோ அதேநிலையில் தான் தமிழ்நட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அண்ணனாக இருந்து அனைத்து ஏற்றத்தாழ்விலும் தோள் கொடுத்து நின்றவர் முரசொலி செல்வம் அவர்கள், முரசொலி ஆசிரியராக இருந்து தன் எழுத்துக்களால் திராவிட முன்னேற்ற கழகத்தை வளர்க்க பெரிதும் உழைத்மவர் மேலும் அவர்களின் எழுத்து பகுத்தறிவு சிந்தனைகளையும் திராவிட சித்தாந்தத்தை பறைச்சாற்றுவ தாக இருந்தது.

அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களை தன் எழுத்துக்களால் வெளியிட்டு ஆட்சிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார் இதனால் ஆத்திரம் அடைந்து 2001 ம் ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு சட்டப்பேரவையில் கூண்டி யேற்றி வஞ்சித்தது துளியும் அஞ்சாமல் தனது புரட்சி பணிகளை தொடர்ந்து ஆற்றிவர் தான் முரசொலி செல்வம் அவர்கள், அவரின் புகழ் தமிழ் இருக்கும் வரை நிலைத்திருக்கும். அமைதி பண்பு பாசம் பரிவு பகுத்தறிவு, திராவிடம் இந்த அத்தனைக்கும் ஒரே பெயர் முரசொலி செல்வம் என்றால் அது மிகை ஆகாது அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது மனைவி அம்மையார் திருமதி செல்வி அவர்களுக்கும், குடும்பத்தா ருக்கும் திராவிட முன்னேற்ற கழகத் தொழர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் ஆழ்ந்த வருத் தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

### தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில்

# பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி ஆய்வு மேற்கொண்டார்!

தருமபுரி, அக். 14 -

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி நேற்று (12.10.2024) ஆய்வு மேற்கொண்டார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாளையம்புதூர் ஊராட்சி, தொம்பரகாம்பட்டியில் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினையும், டொக்குபோதனஹள்ளியில் பூவல்மடுவில் இலங்கைவாழ் தமிழர் மறுவாழ்வு மையத்தில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தடுப்பு சுவர் கட்டுமான பணிகளையும், புதியதாக ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய 12 வீடுகளையும், மலையப்பா நகர் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீடுகள் என மொத்தம் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி. சாந்தி ஆய்வு மேற்கொண்டு, பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்க்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், டொக்குபோதனஹள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி ஆய்வு மேற்கொண்டு, சமையலறை, குழந்தைகளுக்கான அடிப்படை வசதிகள் முறையாக பராமரிக்கப்படு கிறதா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, நல்லம்பள்ளி வட்டாட்சியர் திரு.சிவகுமார், நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன், உதவி பொறியாளர்கள் திருமதி.சுமதி, ஸ்ரீதர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கவரைப்பேட்டை அருகே எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து:

# சிறப்பு விசாரணைக் குழு அமைப்பு!

## ரயில்வே துறை அதிகாரிகள் தகவல்!

சென்னை, அக்.14 -

மைசூரு தர்பங்கா பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து குறித்து ஆய்வு செய்ய சிறப்பு விசாரணை குழு அமைக்கப்பட்டு உள்ளதாக ரயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

கவரைப்பேட்டை அருகே மைசூரு தர்பங்கா பயணிகள் விரைவு ரயில் (வண்டி எண் 12578) சரக்கு ரயில் மீது மோதி நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளா னது. சரக்கு ரயில் மீது விரைவு ரயில் மோதி ஏற்பட்ட விபத்தில் 11 ரயில் பெட்டிகள் தடம் புரண்டது. இதில் இரு பெட்டிகள் தீப்பற்றின. அதிர்ஷ்டவசமாக உயிரிழப்புகள் ஏதும் நிகழ வில்லை. காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மீதம் உள்ள பயணிகள் இரண்டு இ.எம்.யூ. சிறப்பு ரயில்கள் மூலம் சென்னை சென்ட்ரலுக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அரக்கோணம், ரேணிகுண்டா மற்றும் கூடூர் வழியாக தர்பங்கா நோக்கி செல்லும் பயணிகள் சிறப்பு ரயிலில் உணவுப் பொட்டலங்கள் மற்றும் தண்ணீர் வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். சிறப்பு ரயில் காலை 4.45 மணிக்குப் புறப்பட்டது.

விபத்து நடைபெற்ற இடத்தில் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங், சென்னை கோட்ட மேலாளர் விஸ்வநாத் உள்ளிட்ட அதிகாரிகள் பார்வையிட்டு விபத்து குறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிட்டனர். இதையடுத்து சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.






தி.மு.க. இளைஞரணி சார்பில் மண்டல அளவில் திண்டிவனத்தில் நடைபெற்ற 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டுபேச்சு போட்டியை கழக துணை பொது செயலாளர் – வனத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 246மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன்,நகர செயலாளர் சம்பத் உள்ளனர்.